ந.க.அ1/1911/2019 நாள்: 04.03.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**
**சிவகங்கை மாவட்டம்**
**கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம்**

ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் பணியிடங்களுக்கான நேரடி நியமன அறிவிக்கை (Notification)

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், ஒன்றியத் தலைப்பின் கீழ் ஊதியம் வழங்கப்படும் ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் நிலையில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், காலிப்பணியிடங்கள் விபரம், இனச்சுழற்ச்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் www.sivaganga.nic.in இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 19.03.2020 மாலை 5.45 மணி வரை அலுவலக நேரத்தில் தொடர்புடைய ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் கண்ணங்குடி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

<u>அலுவலக உதவியாளர் - ஒரு காலிப்பணியிடம்</u>

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி வரிசை எண் | இன சுழற்சி | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர், ஊராட்சி ஒன்றியம் கண்ணங்குடி. | 1 | 2 | ஆதிதிராவிடர் ( முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) Schedule castes – (Arunthathiyar Preferential basis) DW Women | பெண் (ஆதரவற்ற விதவை) DW Women |
| கல்வித் தகுதி - அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்பு தகுதி - மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும் | | | | | |

## இரவுக் காவலர் - ஒரு காலிப்பணியிடம்

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி வரிசை எண் | இன சுழற்சி | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1 | இரவுக் காவலர், ஊராட்சி ஒன்றியம் கண்ணங்குடி. | 1 | 1 | பொதுப்போட்டி (General Turn/Priority) | - |
| இரவுக் காவலர் தகுதி - எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் | | | | | |

| இனம் | வயது |
|---|---|
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |

- அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் பணிக்கு ஊதிய கட்டு ரூ.15700 - 50000 (நிலை-1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்

## ஈப்பு ஓட்டுநர் - ஒரு காலிப்பணியிடம்

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி வரிசை எண் | இன சுழற்சி | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர், ஊராட்சி ஒன்றியம் கண்ணங்குடி. | 1 | 2 | ஆதிதிராவிடர் ( முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) Schedule castes – (Arunthathiyar Preferential basis) DW Women | பெண் (ஆதரவற்ற விதவை) DW Women |
| கல்வித் தகுதி - ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (விதி 5(2)(a)<br>சிறப்பு தகுதி - 1)1988 மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியிடம் ஓட்டுனர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>2)வாகனம் ஓட்டுவதில் 5 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். | | | | | |

- ஈப்பு ஓட்டுநர் பணிக்கு ஊதிய கட்டு ரூ.19500-62000 ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்.

நிபந்தனைகள்:

1. சிவகங்கை மாவட்டத்தில் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகுதி, இருப்பிடம் (ரேசன்கார்டு மற்றும் ஆதார் கார்டு) சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது
6. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் ( Call Letter) அனுப்பி வைக்கப்படும்.
7. விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கண்ணங்குடி அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 19.03.2020 தேதியன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஒவ்வொரு காலிப் பதவியிடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
9. நியமனத்தை இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ)க்கு உண்டு.

நாள்: 04.03.2020

ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், கண்ணங்குடி